Registered as a newspaper in Ceylon.

# தொண்டன்

கத்தோலிக்க மாத ஏடு.

மலர் 2 ★ மட்டக்களப்பு ★ 1970 - ஐப்பசி ★ விலை 25 ★ இதழ் 9-10

# மேற்றிராசன ஐக்கிய சங்கத்தின் 43வது ஆண்டு மகாநாடு மட்டுநகரில்.

**திருகோணமலை - மட்டக்களப்பு மேற்றிராசன ஐக்கிய சங்கத்தின் 43வது ஆண்டு மகாநாடும் பொதுக்கூட்டமும் மட்டுநகரில் அடுத்துவரும் கார்த்திகைத் திங்கள் 5ந், 6ந் திகதிகளில் நடைபெறுமென்று** தி. ம. மே. ஐ. சங்கத்தின் ஆளுங்குழு தீர்மானித்துள்ளது. மகாநாட்டின் ஆய்வுக்கும் உரையாடலுக்கும், அவற்றைத் தொடர்ந்து தீட்டப்படும் வருடாந்த செயல் திட்டத்திற்கும் **"வளர்ந்தோர்க்கு மறைக்கல்வி"** என்ற விடயம் குறிக்கப்பட்டுள்ளது. இப்பொதுவிடயம் மகாநாட்டில் பின்வரும் தலைப்புகளின் கீழ் ஆராயப்படும்:

1. ''பிள்ளைகளின் மறைக்கல்வியில் பெற்றோரின் பங்கு'' —பேச்சாளர்: மட்டக்களப்புப் பிராந்திய சபை.

2. ''வளர்ந்தோரின் மறை அறிவை வளர்த்தல்''—பேச்சாளர்: திருகோணமலைப் பிராந்திய சபை.

3. ''இளைஞருக்கு மறைக்கல்வி'' —பேச்சாளர்: கல்முனைப் பிராந்திய சபை.

4. ''திருமணத்திற்கு ஆயத்தம்'' —பேச்சாளர்: சிங்களப் பிராந்திய சபை.

இம்மகாநாட்டில் நம் மேற்றிராசனத்தைச் சேர்ந்த வளர்ந்தோர், சிறப்பாகப் பெற்றோர், எல்லாப் பங்குகளிலுமிருந்து ஏராளமாக வந்து, பங்குபற்றிப் பயன் அடைய வேண்டுமென்று ''தொண்டன்'' விரும்புகின்றான்.

## திருகோணமலைப் பிராந்திய கத்தோலிக்க ஆசிரிய சங்க அங்குராப்பணம்

திருகோணமலைப் பிராந்திய கத்தோலிக்க ஆசிரியர் சங்க அங்குராப்பணக் கூட்டம் 15-9-70 அன்று திருகோணமலை புனித சூசையப்பர் தமிழ்ப் பாடசாலை மண்டபத்தில் திருமலை மட்டக்களப்பு துணை ஆயர்

[5ம் பக்கம் பார்க்கவும்]

**"திருச்சட்டத்தை அழிக்கவல்ல...... நிறைவேற்றவே வந்தேன்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவழிபாட்டுச் சிந்தனைகள்

(பொ. இராமலிங்கம்)

## 19. இது விசுவாசத்தின் மறை பொருள்.

சமயத்துக்கு மறையென மறு பெயர் வகுத்தமை மிகப் பொருத்தமானதே. இறைவனின் இலட்சணங்களை அறிய முடியும். ஆனால் இறைவனைக்காண முடிவதில்லை. தம்மை வெளிப்படுத்திக் காட்டினாலொழிய நம் ஊனக்கண்களால் காணமுடியாது. கிறீஸ்துவை—இறைமகனை—இறைவனை யூதர்கள் கண்டார்கள். ஆயினும் அவர்கள்கூட, அவரை இறைவனாகக் காணமுடியவில்லை. மறைவாயிருக்கும் பரம்பொருள் இறைவன்.

இறைவன் மறைபொருளாய் இருப்பது போலவே நம் சமயத்திலும் எத்தனையோ உண்மைகள் மறைபொருளாயுள்ளன. இவ்வாறு மறைபொருளாயிருப்பது, மனிதனை அம் மறைபொருளைத் தேடித் தேடி, நாடிச் செல்லத்தூண்டுகிறது. அதுவும் நலமே.

கிறீஸ்தவர்களாகிய நாம் கிறீஸ்துவை இறைவனென நம்புகிறோம். ஏனெனில் அவரே தாம் இறைவன் என வெளிக்காட்டி, நிரூபித்துவிட்டார்.

திருமுழுக்கின்போது, நாம் புனிதமடைகிறோம். அதேவேளை "விசுவாசம்" என்னும் பொக்கிஷமும் நம்மிடம் வந்தடைகிறது. அதன்பின்பே நாம் 'விசுவாசிகள்' ஆகிறோம். நாம் விசுவாசிக்கிற, விசுவாசிக்கவேண்டிய உன்னத சத்தியம், நாள்தோறும் திருப்பலியில், எழுந்தேற்றம் முடிந்தஉடனே புதுப்பிக்கப்படுகிறது.

குரு: "இது விசுவாசத்தின் மறைபொருள்" என்றவுடன், விசுவாசிகள் "ஆண்டவரே, தேவரீர் வருமளவும், உமது மரணத்தை அறிக்கையாயிடுகிறோம். உமது உயிர்ப்பையும் எடுத்துறைக்கின்றோம்." என்று கூறி, அவ்வுன்னத விசுவாசத்தைப் பெலப்படுத்தி, வெளிக்காட்டுகிறோம். கிறீஸ்துநாதரின் திருமரணத்தையும், உயிர்ப்பையும், விண்ணேற்றத்தையும் நாம் விசுவாசிக்கவில்லையென்றால் நாம் கிறீஸ்தவராயிருக்க முடியாது. இவை உண்மையில்லையென்றால், இன்றுள்ள நிலையில் நம் சமயம் உலக சமயமாக இருக்க முடியாது. உலகின் பெரும் பான்மைச் சமயமாக பெருமையுடன் விளங்கவும் முடியாது.

கிறீஸ்து பிறப்புக்குப்பின் 4ம் நூற்றாண்டு வரை, நீரோ, டயக்கிளீசியன், தேசியுஸ் போன்ற மாபெரும் வலிமைமிக்க சக்கரவர்த்திகள் இச்சமயத்தை வேரறுக்க தம் சக்தியுள்ளடங்கிய யாவற்றையும் செய்தார்களே, கொன்று குவித்தார்களே! இது வரலாறு தரும் மறுக்கமுடியாத உண்மை. எனினும் என்ன நடந்தது? "வேதசாட்சிகளின் இரத்தம், கிறீஸ்தவர்களைப் பிறப்பிக்கும் வித்தாக" மாறி, கிறீஸ்துமதம் மேலும் மேலும் பெருகி இன்றைய நிலையை அடைந்துளது.

கிறீஸ்துவின் இறப்பு, உயிர்ப்பு, விண்ணேற்றத்தை மையமாகக்கொண்டு, நம் வாழ்க்கையில். அவற்றை சரியாக அநுசரிக்கவும், சாட்சிகளாய் விளங்கவும், உதவியாக நமக்கு இன்னும் பல விசுவாச சத்தியங்கள் தரப்பட்டுள்ளன.

**விசுவாசப்பிரமாணம்:** இறைவனையும், பிதா, சுதன், தூய ஆவியெனும் மூன்று ஆட்களையும் நாம் விசுவாசிக்கவும், இவர்களது உண்மைச்செயல்களையும், நமது உயிர்ப்பு, நித்தய சீவியம் என்பவற்றையும் விசுவாசிக்கவும் நாம் கடமைப்பட்டுள்ளவர்கள். நம் சத்திய திருச்சபை ஆதிகாலத்திலிருந்தே, தூய ஆவியால் உந்தப்பெற்று நமக்குப் பணித்துள்ள கட்டளைகளே இந்த விசுவாசப்பிரமாணத்தின் கூறுகள்.

இவற்றைவிட தேவதாயின் கன்னித்துவம், விண்ணேற்பு என்பவையும், புனிதர்கள் மேன்மையும் நம் விசுவாசத்திற்குத் தரப்பட்டுள்ளன.

[10ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பெற்றோர் மன்றம்

## கலப்புத் திருமணத்திற்குரிய புதிய ஒழுங்குகள்

### (துணை ஆயர்)

இரு கத்தோலிக்கர் திருச்சபை முறைப்படி செய்து கொள்ளும் திருமணம் ஒரு தூய நிரந்தர ஒப்பந்தம் மட்டுமன்று, ஒரு திருஅருட்சாதனமாகவும் விளங்குகின்றது. அவர்கள் இருவரும் தங்கள் விசுவாசத்தில் உறுதி பெற்று, பரிசுத்தத்தனத்தை அடையவேண்டும். இறைவன் தமக்களிக்கும் பிள்ளைகளை இறைவனின் மக்களாக, திருச்சபையின் உத்தம உறுப்பினராகக் கரிசனையோடு வளர்க்கவேண்டும். இம் மாபெரும் பொறுப்புகளைச் சரிவர நிறைவேற்றுதற்குத் திருமணம் என்னும் திருவருட்சாதனம் அவர்கட்கு அவசியமான அருள்களை அளிக்கின்றது. தம்பதிகளிடையே மத ஒற்றுமை இல்லையெனில் மேற்கூறிய பாரிய கடமைகளை அவர்கள் சரிவர நிறைவேற்ற முடியாது. இதனிமித்தமே, ஒரு கத்தோலிக்க மகன் ஒரு கத்தோலிக்க மகளை மணந்து கொள்வதையே தாயாகிய திருச்சபை எப்போதும் விரும்புகிறது; ஒரு கத்தோலிக்கர் கத்தோலிக்கரல்லாத ஒருவரை மணமுடித்துக்கொள்வதை விரும்புவதில்லை. எனினும், வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களினிமித்தம் ஒரு கத்தோலிக்கர் கத்தோலிக்கரல்லாத ஒருவரை மணந்துகொள்ள விரும்பும்போது, தாயாகிய திருச்சபை தனது மக்கள்மீது மனமிரங்கி தகுந்த பாதுகாப்புடன் அவர்கட்கு விசேஷ உத்தரவு அளிப்பது வழக்கம்.

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் விளைவாகத் திருச்சபை, மக்களின் மத சுதந்திரத்திற்கும் மனச்சாட்சிக்கும் கூடிய மதிப்பளிக்கின்றது. பிற மதங்களுடன் நல்லுறவை வளர்க்க விரும்புகின்றது. இக்கருத்துகளுக்கேற்ப பரிசுத்த தந்தை 6 வது சின்னப்பர் கலப்புத் திருமணத்திற்குரிய புதிய பொது ஒழுங்குகளைக் கடந்த பங்குனி மாதத்தில் பிரகடனப்படுத்தி, ஒவ்வொரு தேசத்திற்கும் ஏற்ற சிறப்பான ஒழுங்குகளை அந்தந்தத் தேசத்தின் ஆயர்அவை ஏற்படுத்த வேண்டுமென்றும் விரும்பினர். இவ்விருப்பத்திற்கேற்ப இலங்கைக் கத்தோலிக்க ஆயர் அவை சில சிறப்பான ஒழுங்குகளை விதித்துள்ளது. **இவ்வொழுங்குகள் யாவும் இம்மாதம் 1ந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருகின்றன.** அவற்றின் சுருக்கம் வருமாறு:

1. கலப்புத் திருமணத்திற்கு மேற்றிராசன ஆயரின் இளக்கார உத்தரவு எப்போதும் அவசியம்.

2. ஆயரின் இளக்கார உத்தரவைப் பெறுதற்கு,

அ. மணமக்கள் இருவரும் திருமணத்தின் இயல்பு, நோக்கம் பிரதான குணங்கள் ஆகியவை பற்றிய கத்தோலிக்க படிப்பினையை அறிந்து, ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

ஆ. கத்தோலிக்க மணமகன் (மணமகள்) தனது விசுவாசத்திற்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய யாவையும் தான் விலக்குவாரென்றும், தனது விவாகத்தால் பிறக்கும் **எல்லாப் பிள்ளைகளையும்** கத்தோலிக்க முறைப்படி ஞானஸ்நானம் கொடுத்து வளர்க்கத் தன்னாலான முயற்சிகள் யாவும் எடுப்பாரென்றும் **எழுத்துமூலம் வாக்குறுதி அளிக்கவேண்டும்.**

இ. கத்தோலிக்கரல்லாத மணமகன் (மணமகள்) கத்தோலிக்க மணமகள் (மணமகன்) அளிக்கும் மேற்படி வாக்குறுதிகளையும், அவற்றால் உண்டாகும் கடமைகளையும் நன்றாக அறிந்திருக்கிறார் என்பதற்குப் போதிய அத்தாட்சி இருக்க வேண்டும்.

[4ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பெற்றோர் மன்றம்........

(3ம் பக்கத் தொடர்ச்சி)

3. இதுவரை கலப்புத் திருமணங்கள் எப்போதும் கத்தோலிக்க தேவாலயத்தில் ஒரு கத்தோலிக்க குருவினதும் இரு சாட்சிகளினதும் முன்னிலையிலேயே நடைபெற்றன. ஆனால், இப்போது திருச்சபை, மக்களின் மத சுதந்திரத்தையும் மனச்சாட்சியையும் மதித்து, கிறிஸ்தவ ஒருமைப்பாட்டை வளர்க்க விரும்பி, மேற்படி திருச்சபைச்சட்ட முறையிலும் இளக்காரம் அளிக்க முன் வந்துள்ளது.

4. கலப்புத் திருமணத்தைக் கத்தோலிக்க தேவாலயத்தில் திருச்சபை முறைப்படி நடத்துவதற்குக் **காத்திரமான கஷ்டங்கள் இருப்பின்**, அதைக் கத்தோலிக்க தேவாலயத்திற்கு வெளியே பிரசித்தமான, **அத்தாட்சிப் படுத்தக் கூடிய ஒரு முறையில்** நிறைவேற்ற விசேஷ உத்தரவு அளிக்கப்படும்.

5. **தேச வழமைக் கலியாணம் அனுமதிக்கப்பட மாட்டாது**. ஏனெனில், இத்தகைய கலியாணம் அரசாங்க முறைப்படி பதியப்படுவதில்லை.

6. மணமக்களுள் ஒருவர் கத்தோலிக்கராகவும் மற்றவர் பிற கிறிஸ்தவ சபையைச்சார்ந்தவராகவும் இருப்பின்,

அ. ஒரு கத்தோலிக்க குருவும் பிற கிறிஸ்தவ சபைக் குருவும் **ஓரே நேரத்தில்** தங்கள் தங்கள் வழிபாட்டு முறைப்படி திருமணச் சடங்கை நிறைவேற்ற முடியாது. இருதிருமணச் சடங்குகளையும் **அடுத்தடுத்தும்** நிறைவேற்ற முடியாது. **ஒரு திருமணச் சடங்கு மட்டுமே இடம் பெற வேண்டும்.**

ஆ. **காத்திரமான கஷ்டங்களினிமித்தம்** தம் திருமணத்தை பிற கிறிஸ்தவ சபைக் கோயிலில் **அச்சபையின் வழிபாட்டு முறைப்படி** நிறை வேற்ற விசேஷ அனுமதி அளிக்கப்படும். ஆனால், **கத்தோலிக்க மணமகன் (மணமகள்) அச்சபையின் திருவிருந்தில் பங்குகொள்ளக் கூடாது.**

இ. திருமணத்தைக் கலியாணப்பதிவு அதிகாரியின் முன்னிலையில் நிறைவேற்றவும் உத்தரவு அளிக்கப்படும்.

7. ஒரு கத்தோலிக்கருக்கும் ஒரு பிற கிறிஸ்தவருக்குமிடையில் **திருச்சபையின் உத்தரவோடு** நடைபெறும் திருமணம் எப்போதும் ஒரு **திருவருட்சாதனமாகவே** இருக்கும் ஆகவே, அதைக் கத்தோலிக்க தேவாலயத்தில் **திவ்விய பூசையின்போது** நிறைவேற்ற அனுமதி உண்டு. ஆனால் இவ்வாறு திவ்விய பூசையில் பங்கு கொள்ளும் பிற கிறிஸ்தவ மணமகன் (மணமகள்) **திருப்பலி விருந்தில் பங்கு கொள்ள முடியாது.**

8. மணமக்களுள் ஒருவர் கத்தோலிக்கராகவும் மற்றவர் கிறிஸ்தவமல்லாத பிறமதத்தைச் (இந்து மதம், புத்த மதம் முதலியன) சார்ந்தவராகவும் இருப்பின், **காத்திரமான கஷ்டங்களினிமித்தம்** தம் திருமணத்தைக் கலியாணப்பதிவு அதிகாரியின் முன்னிலையில் நிறைவேற்ற அவர்கட்கு விசேஷ உத்தரவு அளிக்கப்படும். ஆனால், **பிற சமய ஆலயத்தில் அதை நிறைவேற்ற அனுமதி அளிக்கப்பட மாட்டாது.** ஏனெனில், பிறமத வழிபாட்டுச் சடங்குகளில் கத்தோலிக்கர் ஒருவர் செயல் முறையில் பங்குபற்ற முடியாது.

9. தமிழ் மக்களின் கலாச்சார முறைப்படி திருமணக் கொண்டாட்டத்தில் **தாலி கட்டும் சடங்கு** முக்கிய இடம் வகிக்கின்றது. ஆகவே, கலப்புத் திருமணத்தில் தாலி கட்டும் **சடங்கு** கத்தோலிக்க தேவாலயத்தில் நடைபெறாவிடின், **மணமகளின் இல்லத்தில் கத்தோலிக்க முறைப்படி** நடைபெற விசேஷ உத்தரவு அளிக்கப்படும். பிற சமய முறைப்படி தாலி கட்டுதல் அனுமதிக்கப்படமாட்டாது.

10. ஒரு கத்தோலிக்கருக்கும் பிற (இந்து, புத்த) மதத்தைச் சார்ந்த ஒருவருக்குமிடையில் நடைபெறும் திருமணம் **ஒரு திருவருட் சாதனமன்று** ஆகவே, அது கத்தோலிக்க தேவாலயத்தில் நிறைவேற்றப்படின், **திவ்விய பூசைக்குப் புறம்பாகவே நிறைவேற்றப்படவேண்டும்.**

கலப்புத் திருமணவாழ்வு பல இன்னல்கள் நிறைந்த வாழ்வு. தம்பதிகளிடையே நிலவும்

(13ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**திருகோணமலைப் பிராந்திய........**
[1ம் பக்கத் தொடர்ச்சி]

அதிவந்தனைக்குரிய தியோகுப்பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

மாண்புமிகு துணை ஆயர் அவர்கள் தமது தொடக்க உரையிலே, இன்று அரசாங்கப் பாடசாலைகளிலே மறைக் கல்வியின் நிலைமை மோசமான நிலைமையிலிருப்பதையும், அத்தகைய நிலைமையை அகற்றி மறைக்கல்விப் போதனையின் தரத்தை உயர்த்த ஆசிரியப் பெருமக்களாற்றான் முடியுமென்றும் அதற்கான வழிவகைகளை அவர்களே ஆராய்தல் வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள்.

இதன் பின் தலைவர் ஞேச் தே வாஸ் அவர்கள் அவையோரை வரவேற்று உரை நிகழ்த்தினார்.

அடுத்து அருட்திரு அரசரெத்தினம் அடிகளார் அவர்கள் சங்கம் இயங்க வேண்டிய அவசியத்தை மேலும் வலியுறுத்தி அதற்கான ஆலோசனைகள் சிலவற்றையும் கூறினார்.

கூட்டத்தின் முக்கிய நிகழ்ச்சியாக அமைந்தது அருட்திரு. ஹென்றி பென்னையா அடிகளார் அவர்களின் கருத்துரை. ஞானோபதேசக் கல்வி இன்று உலக நாடுகளிலே முன்னேறிக் கொண்டிருக்கிறது என்றும், பிற நாட்டவர் கையாளும் புதுமுறைகளைக் கையாண்டால் சிறந்த முறையில் போதிக்கலாம் என்றும் கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் மறைக்கல்விப் போதனையிலே உள்நூலின் அவசியத்தையும் எவ்வாறு ஐந்து அல்லது ஆறு வயதுக் குழந்தையின் மனதிலே அதன் எதிர்காலப் பண்புகள் பதியப்பட்டு விடுகின்றனவென்றும் விளக்கினார். ஆகவே குடும்பம் இம் மறைக்கல்விப் போதனையிலே நடுநாயகமாய் விளங்க வேண்டும் என்றும் கூறினார். வயது வந்தோருக்கான மறைக்கல்விப் போதனையின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

பின்வருவோர் சங்கத்தின் உத்தியோகத்தர்களாகக் தெரியப்பட்டனர்.

| | |
|---|---|
| புரவலர் | : மகா வந்தனைக்குரிய திருமலை மட்டக்களப்பு மேற்றிராணி ஆண்டகை அவர்கள். |
| ஞானத் தலைவர் | : அருட்திரு. ஹென்றி பொன்னையா அடிகளார். |
| தலைவர் | : திரு. N. கணபதிப்பிள்ளை. |
| உப-தலைவர்கள் | : பண்டிதர் பீ. எம். குருஸ். திருமதி. எஸ். யோசப், |
| செயலாளர் | : அருட்திரு. எஸ். ஏ. ஐ. மெத்தியு, S. S. J. |
| உப-செயலாளர் | : திரு. எஸ். எம். தேவதாசன். |
| பொருளாளர் | : தவத்திரு. சகோதரி. M. லில்லி யோசா, A. C. |
| செயற்குழு உறுப்பினர் | : திரு. சந்தியாப்பிள்ளை — மூதூர். |
| | திரு. யோ. மரியதாஸ் — பெரியகடை. |
| | திரு. யோசப் — நிலாவெளி. |
| | திருமதி. M. அல்போன்ஸ்மேரி — சின்னக்கடை. |
| | செல்வி. கிறிஸ்சோஸ்தம் - பாலையூற்று. |

இதன் பின்பு நடைபெற்ற கலந்துரையாடலிலே சங்கத்தின் அங்கத்தவர்கள் வருடம் ரூபா 3-00 சந்தாப்பணம் செலுத்த வேண்டுமென ஏகமனதாய் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பிராந்திய செயலாளர் ஜே. எஸ். செபமாலை அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடிவெய்தியது.

எஸ். ஏ. ஐ. மெத்தியு, S. S. J.
செயலாளர்.

# அம்மா

அன்பு பெருகிடவே அம்மா
அருள் தந்தெமை ஆளும் அம்மா
கவலை நீங்கிடவே அம்மா
கருணை கூர்வாய் அம்மா

முட்களுள் லீலி அம்மா
மூவுலக ராணி அம்மா
மங்கையர்க் கரசி அம்மா
மங்காத் தாரகை அம்மா

வாடாத ரோசா அம்மா
வாழ்வளிக்கும் வாய்க்கால் அம்மா
பாரில் பாவம் பெருகுதம்மா
பாவியெம் மேல் இரங்கும் அம்மா

கன்னியர்க்கரசி அம்மா
கற்பு நெறிக் காவல் அம்மா
செபம் தபம் செய்வோம் அம்மா
செபமாலைத் தாயே அம்மா

Sr. M. Liliosa, A. C.
திருமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாணவர் மன்றம்

## புனித லூக்காஸ் சுவிசேஷம்.

### 3. (இ) கிறிஸ்து பரிசேயர், சட்டவல்லுநர், மறைநூல் அறிஞருடன் செய்த விவாதங்கள்.

அருள்திரு. R S. லோப்பு அடிகள்.

யூத சமயத்தின் பிரதிநிதிகளை, இயேசு கிறீஸ்து, இப்போது சந்திக்கிறார். தங்களை ''நீதிமான்கள்'' என்று கூறிக்கொள்ளும் பரிசேயர்கள் ஒருபுறம், யூத சட்ட வல்லுநர்கள், மறைநூல் அறிஞர்கள் மறுபுறம். இவர்கள் எல்லோரும் இயேசுகிறீஸ்துவைப் பற்றி, அவரது போதனை, செய்கைகளைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். அவரில் வெறுப்புக் கொண்டிருக்கிறார்கள். விவாதத்தின் மூலம், இயேசுவில் பிழை பிடித்து, மக்களின் ஆதரவைப்பெற இவர்கள் நினைத்தனர். முக்கியமான ஐந்து விவாதங்களில் பிரச்சினைகளைக் கிளப்பினர்; கிறிஸ்துவில் பிழைபிடிக்க முயற்சித்து தோல்வியுற்றனர். இந்த ஐந்து முக்கிய விவாதங்களையும், லூக்காஸ் தம் சுவிசேசத்தில்: 5, 17–6, 11 வரையிலுள்ள பந்திகளில் ஒன்றன்பின் ஒன்ருகக் கூறியுள்ளார்.

(i) திமிர்வாதக் காரனைக் குணமாக்கிய பொழுது, பாவத்தை மன்னிக்க தமக்கு அதிகாரமுண்டு என்பது பற்றி: 5,17–26.

(ii) லேவியைச் சீடஞக அழைத்து, ஆயக்காரரோடும், பாவிகளோடும், இயேசு பந்தியமர்ந்தபொழுது: 5,27–32.

(iii) சீடர்கள் உபவாசம் செய்யத் தவறிய பொழுது, அவர்கள் நோன்பு அனுசரிக்க வேண்டியது பற்றி; 5,33-39.

(iv) ஓய்வு நாளில் சீசர்கள், கதிர்களைக் கொய்து தின்றபொழுது, ஓய்வு அனுசரிப்பதுப்பற்றி: 6,1–5.

(v) ஓய்வு நாளில் சூம்பிய கரம்கொண்ட ஒருவனைச் சுகப்படுத்தியபொழுது, ஓய்வு நாளில் நன்மை செய்வது பற்றி: 6,6–11.

மெசியாவின் வருகையை யூதமக்களனை வரும் எதிர்பாத்திருந்தார்கள். இவர்கள் எல்லோரும் எதிர்பார்த்திருந்த மெசியா, இரக்கத்தின், அன்பின், ஞான இராட்சியத்தை எல்லா மக்களுக்கும் ஏற்படுத்தி, இரட்சணியம் அனைவருக்கும் உண்டு, என்று போதிக்கிற ஒருவரல்ல. மாருக, உலகமனைத்தையும், யூதசனத்துக்கு அடிமைப்படுத்தி, யூத சட்டத்தின்படி எல்லோரையும் நடக்க வைக்கக்கூடிய ஒருவரையே எதிர்பார்த்தனர் எனவே, இப்படியான ஒரு கொள்கையைக் கடைப்பிடிக்காத இயேசுவின் பேச்சிலும், செய்கையிலும், பிழைபிடிக்க, கலிலேயா, யூதேயா நாடுகளிலுள்ள எல்லா ஊர்களிலுமிருந்து, பிரதிநிதிகள் வந்திருக்கிறார்கள்.

#### (i) பாவத்தை மன்னிக்கும் அதிகாரம்

இயேசு, இவ்விடயத்தில் முக்கியமாக நிரூபிக்க விரும்பியது என்னவென்ருல்: சரீர நோயை மட்டுமல்ல, ஆன்ம நோயையும் குணமாக்கத் தம்மால் முடியும் என்பது. பாவத்தை மன்னிக்கும் சக்தி (தேவசுபாவம்) தம்மிடமிருக்கிறதாகக் கூருமல் கூறுகிருர். கடவுள் ஒருவரேயன்றி, பாவத்தை மன்னிக்கக் கூடியவர் யார்? என்று தங்கள் மனதில் நினைப்பதையே, தம்மால் அறியக்கூடும் என்று நிரூபிக்கின்ருர்.

பாவ மன்னிப்பை மக்கள் கண்ணுல் காணமுடியாது, ஆனுல் சரீரத்திலுள்ள வருத்தம் நீங்குவதை மக்கள் கண்ணுல் காணமுடியும். எனவே, மக்கள் கண்ணுல் பார்க்கக் கூடியதைச் செய்து காட்டுவதினுல், மக்கள் கண்ணுல் பார்க்க முடியாததையும் செய்யும் சக்தி, தம்மிடமிருப்பதாகக் காட்ட விரும்பினுர். விசுவாசமின்றிப் பாவம் மன்னிக்கப்

(7ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**மாணவர் மன்றம்............**

[6ம் பக்கத் தொடர்ச்சி]

படமாட்டாது. திமிர்வாதக்காரனைக் கொண்டுவந்தவர்களின் விசுவாசத்தை முதலில் பாராட்டி, நோயாளியின் விசுவாசத்தை வெளிப்படுத்தினார்.

தன்னை ''மனுமகன்'' என்று கூறுவதினால், தானியேல் ஆகமத்தில், ''மனுமகன்'' என்ற சொல்லுக்கு கொடுக்கப்பட்ட அர்த்தத்தை நினைவுறுத்துகிறார். (தானியேல் 7,13.) தானியேல் ஆகமத்தில், ''மனுமகன்'' என்ற சொல்லுக்கு: ஒரு விஷேஷ விதத்தில், கடவுளின் வல்லமையிலும், மகிமையிலும் பங்கு கொள்ளும் ஒரு மனிதப் பிறவி, என்பது பொருள். எசெக்கியேல் ஆகமத்திலும், இந்த வார்த்தை அடிக்கடி வருகின்றது. கடவுளின் பணியாளனாகிய இவர், தாழ்ச்சியும், நம்பிக்கையுமுள்ளவர் என்ற அர்த்தத்தில், எசெக்கியேல் ஆகமத்தில் வருகின்றது. ''மெசியா'' ''தேவசுதன்'' என்ற வார்த்தைகளைவிட இயேசு, ''மனுமகன்'' என்ற வார்த்தையை விரும்பி உபயோகித்த பொழுது, எசெக்கியேல் ஆகமத்தில் வரும் அர்த்தத்திலுமிருக்கலாம்.

### (ii) ஆயக்காரரோடும் பாவிகளோடும் பந்தியமருதல்.

தனக்கு வருத்தமென்று ஒத்துக்கொள்ளாதவனுடைய வருத்தத்தைச் சுகமாக்க முடியாது. மன்னிப்பு அடைய விரும்பாதவர்களை எவரும் மன்னிக்கமுடியாது. ஒரு ஆயக்காரனை இயேசு சீஷனாக அழைப்பது, அன்றைய யூதமக்களுக்கு ஒரு பேரிடிபோலிருந்தது. யூதசமுதாயத்தால் கழிக்கப்பட்டு, வெறுக்கப்பட்டிருந்த ஒரு சமுதாயம்தான் ஆயக்காரர். இவர்கள் உரோமச் சக்கரவர்த்திக்கு வரி எடுப்பதில் சேவை செய்தவர்கள்.

இயேசுவில் விசுவாசம் கொள்ளுபவர்கள். முதலில் பச்சாத்தாபப்பட்டு மனம் திரும்ப வேண்டும். இது பரிசேயருக்கு மிகமிக கஷ்டமான ஒரு காரியமாக இருந்தது. ஏனெனில் பரிசேயர்கள் தங்களை ''நீதிமான்கள்'' என்று நினைத்துக்கொண்டார்கள். ஆயக்காரர்களுக்கும் பாவிகளுக்கும் இது மிகவும் சுலபமான காரியம். இயேசுவின் நற்செய்தியின் விளைவு பச்சாத்தாபம் - இருதயத்தில் மாற்றம். புதியதற்கும் பழையதற்குமிடையில் முரண்பாடு; சரித்திர முடிவில் வரவிருக்கிற மோட்ச விருந்திற்கும், இந்த விருந்துக்குமுள்ள ஒற்றுமை; சட்டத்தை அழிக்கவல்ல, ஆனால் பூரணப்படுத்தவே, கிறீஸ்து வந்தார், என்ற உண்மைகளையும், நாம் இதிலிருந்து விளங்கிக் கொள்ளவேண்டும்.

### (iii) உபவாசமிருத்தல்

இயேசுவின் சிஷர்கள் நோன்பு இருக்காததுபற்றி, எதிரிகள் குற்றம் சுமத்தினார்கள். அருளப்பரின் சீஷர்களும், பரிசேயருடைய சீஷர்களும் அடிக்கடி நோன்பு அனுசரிக்கிறார்கள் என்றும் கூறினார்கள். இயேசுகிறீஸ்துநாதர், இவ்விடத்தில், ஒரு பாரிய உண்மையை, அவருடைய எதிரிகளுக்கு விளக்குகிறார். பழைய ஏற்பாட்டில் ''யாவே'' இஸ்ராயேலின் மணவாளன், என்ற அர்த்தத்தில் கூறப்பட்டுள்ளது. அதே அர்த்தத்தில், இயேசுகிறீஸ்துவும், தாம் புதிய இஸ்ராயேலின் மணவாளன் என்று கூறுகிறார். மணவாளன் இருக்கும்போது, அவ்வீட்டார் நோன்பு இருக்கக் கூடாது. மணவாளனோடு மகிழ்ந்து கொண்டாட வேண்டும். அதே போன்று, புதிய இஸ்ராயேலின் மணவாளன் தான் என்றும், தன் அன்பர்களோடு இருக்கும் அந்தக் குறுகிய காலத்தில் அவர்கள் நோன்பிருக்கத் தேவையில்லையென்றும் கூறி, தம் மரணத்தைப் பற்றிக் கூறாமல் கூறினார்.

''புதிய போர்வையிலே ஒரு துண்டைக் கிழித்துப் பழைய போர்வைக்கு ஒட்டுப் போடுவார் யாருமில்லை.'' ''புது திராட்சை இரசத்தைப் பழஞ் சித்தைகளில் ஊற்றி வைப்பார் எவருமில்லை.'' இயேசுவின் நற்செய்தியான புதிய சட்டம், மோசேசுடைய பழைய சட்டத்துக்கு, ஒட்டுப் போடுவது போலிருந்தது. அப்படி ஒட்டுப் போடவும் முடியாது; அப்படிச் செய்தால், இரண்டும் பிரயோசனமற்றுப் போகும், என்று கூறி, புரட்சியான ஒரு தகவலைக் கொடுத்தார். இன்னும், இயேசுவின் நற்செய்தியான புதிய இரசத்தை, யூதமக்களுடைய பழைய சட்டமான, பழைய சித்தைகளில் ஊற்ற முடியாது. புதிய இரசத்தை தாங்க, பழை சித்தைகளால் மூடியவே முடியாது. அப்படி ஊற்றினால் இரண்டும் பாழாகப் போகும்.

### (iv) ஓய்வு நாள் அனுசரிப்பது

ஓய்வு நாளை, பரிசேயர் கூறுவதுபோல அனுசரிப்பதினால், ஒருவன் தன்னை இரட்சிக்க

[10ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜெயம் அளிக்கும்

# மன்னிப்பு (7)

## (தொடர் கதை)

★

கண்மணிக்கு என்ன செய்தும் அவள் மனதை மாற்ற முடியவில்லை. வருவாய் குறைந்தால் வழிக்கு வருவாள் என்று எண்ணி, வயலில் நட்டமேற்பட்டுவிட்டது என அழுதாள் சின்னம்மா. தனது சொந்தக்காரன் ஒருவனை வயல் நிலங்களைப் பார்த்துவர நியமித்தாள். அவனோ அவற்றின் ஊதியத்தை தான் எடுத்துக்கொண்டு, நட்டம் என வீண் சாட்டுச் சொன்னான். சின்னத்தம்பியார் கண் போல் பராமரித்த வயல் இப்பொழுது தாயற்ற பிள்ளையாக நின்றது. இந்தத் திட்டங்களையெல்லாம் கண்மணி அறிவாள். அறிந்தாலும் அவள் பெண், என்ன செய்ய முடியும்? வயல் வெளிக்குச் சென்று பாடுபட முடியுமா? அப்படிச்செய்ய சின்னம்மா அனுமதிப்பாளா? நடப்பது நடக்கட்டும் என்று பேசாதிருந்தாள். கண்மணியை தன் வழிக்குக் கொண்டுவர முடியாததினாலும், இதற்குக் காரணம் நான் அவளுக்குக் கூறும் அறிவுரைகள்தான் என்றும் எண்ணி அவர்களது சீற்றம் என்மீது திரும்பியது. என்னைப் பலவாறு தூற்றத்தொடங்கினர். சாதாரணமாக நலம் விசாரிப்பதுபோல இந்த விஷயங்களைக் கேட்டுவிட்டு, அனுதாபப்படுவது போல், சிலர் நையாண்டி பண்ணினார்கள். ''மாஸ்டர் பாரமெடுப்பார்,'' என்பது போன்ற குத்தல்க் கதைகளும் காதில் விழுந்தன. லீவு எழுதிக்கொடுத்துவிட்டு வீட்டுக்கு வந்தேன். அது நிம்மதியாகத்தான் இருந்தது. லீவு முடிந்து பள்ளிக்கூடம் போன போது மீண்டும் பழைய பல்லவிகள் ஆரம்பித்தன. இது எனக்குப் பெரிய சோதனையாக இருந்தது. தலைமையாசிரியரிடம் எனது நிலையை எடுத்துரைத்தேன். ''மாற்றம் ஒன்று கிடைத்தால் இதற்கு ஒரு வழி பிறக்கும். எனவே, நீ ஒரு மாற்றம் எழுதிக் கேட்டுப்பார்'' என்றார். இந்த நிலை சோதனையாக இருந்தாலும், கண்மணியை விட்டுப் பிரிய மனம்வரவில்லை. அநாதரவான நிலையில் அவளை விட்டுப்போவதா? அத்தனை விஷயங்களையும் அறிந்துகொண்டு அவளைத் தனியே விட்டுப்போனால், ஆதரவு இல்லாமல் அதிகம் கஷ்டப்படுவாள். ஒருவித பாச உணர்ச்சி என்னைப் போகவிடாமல் தடுத்தது. எனது நண்பன் செய்த தவறை எப்படியும் நிவர்த்தியாக்கவேண்டுமென்ற இலட்சியம். இவற்றிற்கெல்லாம் மேலாக சாதாரணமாக ஒரு மனிதன் மற்றவனுக்குச் செய்யும் கடமை — நான் ''நல்ல சமாரியனாகவே'' இருக்க விரும்பினேன். நான் அவளுக்கு ஆதரவாக இருந்து அறிவுரை கூறுவதால் அவளை எதுவும் செய்யமுடியவில்லை. எனவே, அவளை வழிக்குக் கொண்டுவருவதாக இருந்தால் என்னை ஒழிக்கவேண்டும். இதனால் அவர்கள் என்னை வெளியேற்றுமுன் நானே வெளியேற எண்ணினேன். மேலும் இதனால் எனது உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டால் என்ன செய்வது; எனது இந்த நெருக்கடியான நிலையை விளங்கிய தலைமையாசிரியர், எனது மாற்றம் சம்பந்தமாகப் பெரு முயற்சி எடுத்தார். இதையறிந்த கண்மணியும் இதை வரவேற்றாள். எனது விதிக்கு நான் அல்லல்ப்படும் பொழுது மற்றவரும் கஷ்டப்படவேண்டுமா? என்றிருந்தாள். என்றாலும் தனக்கு ஆதரவாக இருந்த மற்ற ஜீவனும் பிரியும்போது, துக்கம் பொங்கியது. அதையும் அவள் வெளிக்காட்டவில்லை. இரண்டு மாதத்தில் மலைநாட்டுக்கு எனக்கு மாற்றம் கிடைத்தது. இது எனது இன்றைய நெருக்கடியான நிலைமைக்கு விடுதலையளித்தாலும், மனம் மாறவில்லை. நான் கண்மணியிடம் விடைபெற்ற பொழுது, அவள் கதறியழுவாளென எதிர்ப்பார்த்தேன். ஆனால், அவள் அழவில்லை. மாறாக எனக்குத் தைரியம் சொன்னாள். ''எனக்காக நீங்கள் பட்ட கஷ்டங்களுக்கு நான் எப்படி உழைத்தாலும் நன்றிக் கடன் தீராது. என் சொந்தச் சகோதரம் போல உங்கள் இரத்தத்தைக் கொடுத்து, எனக்கு உயிர் அளித்தீர்கள். வீண் அவலச் சொல்லுக்கும் ஆளாகி மனவருத்தப்பட்டீர்கள்; இவைகளுக்காக நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன். நீங்கள் எனக்களித்த புத்தகங்களாலும், உங்கள் போதனைகளாலும் எனது வாழ்வை வளப்படுத்துகிறேன். அப்படி வளமான நன்னாளில் ஒருநாளைக்கு உங்களையும் சந்திப்பேன். இல்லையெனில் இறைவன் திருவடியில் தலைசாய்க்கிறேன். எங்கிருந்தாலும் இந்த ஒன்டியை மறந்துவிடாதீர்கள். எனக் கைகூப்பி விடையளித்தபோது 'கண்மணி' என்பதற்குமேல் வார்த்தை வரவில்லை. அவளும் பேசவில்லை. நீண்டநேர மௌனத்தைக் கலைத்து ''நீ வளமாகச் சீவிக்கத்தான்

[9ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மன்னிப்பு............

[8ம் பக்கத் தொடர்ச்சி]

போகிருய். நானும் பார்க்கத்தான் போகி போகிறேன்'' என்று ஏதோ கூறி விடைபெற்றுக்கொண்டேன். ஆனுல், என் நெஞ்சம் அமைதி பெறவில்லை. பலநாள் அல்லல்ப்பட்டது, அந்தரமான நிலையில் ஒரு பெண்ணை விட்டுவந்ததையிட்டு, வருந்தினேன். இதற்காக எனக்கு மன்னிப்புக் கொடுக்கும்படி கடவுளை வேண்டினேன். புதிய இடத்தில் தொழில் செய்யத் தொடங்கியதும் இந்த எண்ணம் மாறிவிடும் என எண்ணினேன். ஆனுல் அது எப்பொழுதும் என் மனதில் மோதிக்கொண்டேயிருந்தது.

காலம் என்ற காட்டாறு பெரிய பாறை போன்ற நிகழ்ச்சிகளையும் தொலை தூரம் உருட்டிச்செல்ல வல்லது. இந்தப் பெரிய வெள்ளத்தில் ஒரு தனி மனித வாழ்க்கை ஒரு சிறு துளி. அந்தச் சிறு துளியில் ஒரு பகுதிதான் கண்மணியுடன் நான் பழகிய காலம். எனவே பெரிய வெள்ளத்தில் ஒரு துளியின் சிறு துளி எம்மாத்திரம்? அது கரைந்துவிட்டது. இந்த நிலையில் எனது திருமணமும் நடைபெற்றது. இல்லறத்தில் ஈடுபட்டுப் ''பிள்ளைகுட்டிக்காரனுன'' பிறகு அந்த நிகழ்சி எப்போ ஒருகாலத்தில் நடந்த கதையாகிவிட்டது. 'இம்' என்ற பெருமூச்சுடன் கதையை நிறுத்தினேன். என் மனைவி அழுதிருக்கவேண்டும், ஏனெனில் கண்கள் சிவந்திருந்தன. ''**அப்படியானுல் கண்மணிக்கும் மேரிக்கும் என்ன சம்பந்தம்?**'' என்ருள் ''இன்னுமா விளங்கவில்லை?'' என்ருள் இதுவரை தலைகுனிந்து கதையைக் கவனித்துக்கொண்டிருந்த மேரி. ''மாஸ்டர் அந்தக் கிராமத்தை விட்டுப் போனதும், ஆதரவற்றவளானேன். எனது இந்த தனிமையான, நிராதரவான நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, என்னை மறுமணம் முடிக்கும்படி தூண்டினுர்கள். பல தொல்லையும் கொடுத்தார்கள். நான் இரவில் எனதறையில் படுத்திருக்கும் போது, என்னை பலவந்தம் செய்தால் என்ன செய்வது, கூச்சலிட்டாலும், எல்லோரும் சேர்ந்து என்னைக் கெட்டவள் என்பார்களே தவிர, இரக்கம் காட்டமாட்டார்கள். என்னை மடக்க இந்த வழியையும் பின்பற்றலாம். இதற்கு ஒரு முடிவு காண வேண்டும். இவர்களுக்கு ஒரு பாடம் கற்பிக்க எண்ணினேன். இதற்கான துணிவைத்தந்து என்னை வழிநடத்தும்படி இறைவனை வேண்டினேன். அந்த நேரம் என் மனம் பட்ட அவஸ்தையை வெறும் வார்த்தைகளால் சொல்ல முடியாது. மாஸ்டர் எனக்கு திருமணமான புதிதில் சில யோசனைகளும் அறிவுரைகளும் கூறியிருந்தார். எனக்கு உயிர்தந்த அந்த உபதேசத்தைப் பின்பற்ற எண்ணினேன். பலநாள் பலவித துன்பங்களாலும் அல்லல்ப்பட்டு மனதில் வைராக்கியம் குடிகொண்டது. தனித்துவாழ முடியும் என்பதை நிரூபிக்கப் புறப்பட்டேன். போகுமுன் அவர்கள் சந்தேகப்படாமலிருக்க ''குழந்தைக்கு சுகமில்லை ஆஸ்பத்திரிக்குப் போகிறேன் என்று கூறிவிட்டு கிராமத்தை விட்டு வெளியேறினேன். பொன், பொருள், துணி மணி, ஆஸ்திகள் இவையெல்லாம் துறந்து தன்னை பின்பற்றச் சொன்னுர் யேசு பிரான். பிறரது குற்றத்தை மன்னிக்கச் சொன்னுர். என்னை அவதூறு பேசியவர்களுக்கு மனப்பூர்வமாக மன்னிப்பு கொடுத்துவிட்டு, என் ஒரே ஒரு சொத்து என் குழந்தையுடன் வந்துவிட்டேன். பட்டணத்திலுள்ள கன்னியர் மடம் என்னை வரவேற்றது. அவர்களின் அன்பு என்னை ஆட்கொண்டது. நானும் அந்த அன்பு மதத்தைத் தழுவி, மேரி என்ற பெயர் பெற்றேன். இந்த ஊருக்கு இரண்டு மாதத்துக்கு முன்தான் வந்தேன். இந்த ஊருக்குவர சிறிது தயக்கமாக இருந்தது. நானிருக்கும் சூழலில் என்னை எந்தத் துன்பமும் நெருங்கிவிட முடியாது,'' என்று மிகுதியை மேரி முடித்ததும், அவள் அகத்தில் நிம்மதியேற்பட்டதுபோல, முகத்தில் ஒளியுண்டாயிற்று. ''எற்வேட்டை பிறகு சந்திக்கவேயில்லையா?'' என்று மனைவி கேட்டாள். ''இல்லை'' என்று குனிந்த தலையுடன் பதில் சொன்னுள். ''அவன் மிகவும் கஷ்டப்படுகிருனும். சிலாபப் பகுதியில் ஒரு சிங்களப் பெண்ணை மணந்ததினுல், வீட்டைவிட்டு விரட்டிவிட்டார்கள். ஏழெட்டு பிள்ளைகளடங்கிய பெரிய குடும்பச் சுமையுடன், மது அரக்கனுக்கடிமையாகி துன்பத்தின் மறுஉருவாக அலைகிருன். அவனுக்கு கயரோகம் என்றும் கேள்விப்பட்டேன்,'' என்று அவனைப்பற்றிக் கூறினேன். ''ஐயோ பாவம்'' என்று கண்ணீர் வடித்தாள். இத்தனை துரோகம் செய்த பின்னும் அவனுக்காக இரங்க முடிகிறது இவளால்! எத்துணை அன்பு! ''பாவமா இதுவும் வேணும் இன்னமும் வர வேணும். பெண்குலத்தை சிதைக்கும் பாவிகள் ஒழிய வேண்டும்'' என்று மனைவி தனது ஆத்திரத்தைக் கொட்டினுள். ஆனுல் மேரியோ அளவுகடந்த அமைதியுடன் வேண்

(10ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**இறைவழிபாட்டுச்............**

[2ம் பக்கத் தொடர்ச்சி]

இந்த மறைபொருட்களை நாம் அறிய முயல்வது, புனித அகுஸ்தீனுர் பெற்ற முடிவுக்கே நம்மைக் கொண்டுசேர்க்கும். திருச்சபையின் தலைசிறந்த மறைவிற்பன்னருள் ஒருவர் புனித அகுஸ்தீனுருக்கு, ''திரித்துவம்'' என்னும் மறைபொருள் பெரிய மயக்கத்தை அளித்தது. ஆராய்ந்தறிய முயன்ருர். கடற்கரையில் உலாவி, ஆழமாக ஆராய்ந்தார். அங்கு கடற்கரையில் அழகிய சிறுவன் ஒருவனைக் கண்டார். அவன் சிப்பி ஒன்ருல் கடல் நீரை அள்ளி, அள்ளி ஒரு குழியில் இறைக்க முயன்றுகொண்டிருந்தான். அவரோ வியப்புடன் அவனை நோக்கி மகனே, இச்சிப்பியால் இக்குழியில் கடல் நீரை எல்லாம் இறைக்க முடியுமா?'' என்று கேட்டார். சிறுவனும் அவரை நிமிர்ந்து நோக்கி ''தந்தையே, என்னுல் இச்சிறுகருமம் எவ்வாறு முடியாதோ, அதேபோலத்தான் நீங்கள் இப்போது சிந்திக்கும் வுஷயமும் உங்களால் முடியாது'' என்று கூறி மறைந்துவிட்டான். அகுஸ்தீனுருக்கும் உண்மை விளங்கிவிட்டது. ஆராய்ச்சியையே விட்டுவிட்டார்.

திருச்சபை நமக்களிக்கும் விசுவாச சத்தியங்களின் மறைபொருட்களை, அவற்றின் உட்பொருளை நம்மால் அறியமுடியாது. ஆனுல் அவை முற்றிலும் உண்மை. அவரது மறையுடலாம் திருச்சபை நமக்களிப்பன உண்மை. நாம் விசுவாசம் பெற்றலர்கள். ஆகவே, அவ்வுண்மைகளைத் திரிகரண சுத்தியுடன் ஏற்று விசுவசித்து வாழ்தலே நம் கிறீஸ்தவ வாழ்வு.

திருப்பலியை நாம் ஒப்புக்கொடுக்கும்போது, இறைவன் பீடத்தில் பிரசன்னமாகும்போது, நாம் தவருமல், தயங்காமல் அந்த மாபெரும் மறைபொருளை எடுத்துரைக்கவேண்டும். அது நம்மை நித்திய வாழ்வுக்கு எடுத்துச்செல்லும். ★

---

**மாணவர் மன்றம்............**

[7ம் பக்கத் தொடர்ச்சி]

முடியாது என்று, இயேசு கூறவிரும்பினுர். மோசேஸ் உடைய சட்டமென்று, பரிசேயர் கூறும் சட்டம், வேதாகமத்தில் கடைசி வார்த்தையாகவோ, அல்லது பூரணதிருப்தியாகவோ இருக்கமுடியாது என்று நிரூபிப்பதற்கு, இயேசு தம் சீஷரை ஓய்வு நாளில் கதிர் கொய்து சிறு உணவு தயாரிக்க அனுமதிக்கிருர். ஓய்வு நாளின் ஆண்டவர் தாமே என்று காட்டுகிருர். பரிசேயருடைய பயங்கரமான ஆட்சேபனைக்கு, இயேசு, பழைய ஆகமத்திலிருந்து தாவீது அரசனின் செய்கையை மேற்கோளாக எடுத்துக் காட்டுகிருர். தாவீது அரசன் செய்ததை, தாவீது அரசனின் மகனுகிய மெசியா செய்யக் கூடாதா?

**(V) ஓய்வு நாளில் நன்மை செய்வது**

சட்டம் மனிதனுக்காக, மனிதன் சட்டத்துக்காக அல்ல, என்ற உண்மையை விளக்கி, யூதர்களுடைய சட்டவிரோதமான, குரோத மனப்பான்மைக்கு சாவுமணி அடிக்கிருர் இயேசு. ஓய்வு நாளில் பிறருக்கு நன்மை செய்ய அவசியமேற்பட்டால், நிட்சயமாக நன்மைசெய்ய வேண்டும் என்பதற்கு அத்தாட்சியாக, ஓய்வு நாளில், செபக்கூடத்தில், சூம்பியகைகொண்ட ஒருவனைச் சுகப்படுத்தினுர். பழைய சட்டத்தைக் கிறீஸ்து அழிக்க வரவில்லை; அதைப் பூரணப்படுத்தவே வந்தார். அன்பின் சேவை என்னும் புதுச்சட்டத்தை வெளிப்படுத்தினுர். ஓய்வு நாளில் ஒருவனை ஆக்க (குணமாக்க) யூத சட்டம் இடம்கொடுக்கவில்லை. ஆனுல் ஓய்வு நாளில், கிறீஸ்துவை அழிக்கத் (கொலை செய்ய) திட்டமிட, யூதசட்டம் இடம்கொடுக்கிறது என்பது, பரிசேயரது கொள்கை போலும்! ✿

---

**மன்னிப்பு............**

(9ம் பக்கத் தொடர்ச்சி)

டாம், கடவுள் தண்டிக்கட்டும், என்னைப் பொறுத்தளவில் இன்னமும் அவர் நல்வாழ்வுக்காக கடவுளைத் தினமும் வேண்டுகிறேன். அன்புமதமாம் கிறீஸ்தவ மதத்தைத் தழுவிய அன்றே என் பாவங்கள் கழுவப்பட்டு புதுப் பெண்ணுகிவிட்டேன். இன்னும் அந்த மதம் போதிக்கும் படிப்பினையைப் பின்பற்றி நடக்கவேண்டும். அவருக்கு மனப்பூர்வமாக **மன்னிப்பு** அளிப்பதில்தான் எனக்கு ஆத்ம திருப்தியும் ஏற்படுகிறது,'' என்ருள்.

[முற்றும்]

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இளைஞர் இல்லம்

## கிறிஸ்துவத்தில் எனது பங்கு (2)

சேவை செய்வதற்கு நம்முள் எவரும் சிறியோன் என்றோ, அற்பன் என்றோ எண்ண வேண்டியதில்லை. ''ஆரவாரத்துடன் இருளை நிந்திப்பதைவிட அமைதியுடன் ஒரு விளக்கை ஏற்றுவது என்றும் சாலச்சிறந்தது'' ஆண்களும், பெண்களும் வாழும் கிறிஸ்துவாக: உணர்ச்சியோடு நடமாடும் கிறிஸ்துவைத் தாங்குபவர்களாக இருக்கவேண்டும். நமது ஆண்டவராகிய கிறிஸ்து ஸ்நாபக அருளப்பருடைய சீடருக்குத் தனது தெய்வீகத் தன்மையின் சிறப்பைக் காட்டும்படியாக ''நீங்கள் போய் இங்கு கண்டவற்றையும் கேட்டவற்றையும் அவரிடம் கூறுங்கள்'' என்று மொழிந்தார். நாமும் அதே போன்று நம் கத்தோலிக்க மதத்தின் உண்மையை நிலைநாட்டக் கூடிய தகுதியுடையவர்களாக இருக்க வேண்டும் உன்னைச் சுற்றிலும் நோக்கிப்பார் நீ உனது அயலானுடன் எவ்வாறு வாழ்கின்றுய் என உன்னையே ஒருமுறை வினவி ''நான் ஒரு கத்தோலிக்கனு?'' என்பதைத் தீர்மானித்துக்கொள். பெரும்பாலும் நமது கத்தோலித்துவம் பாரம் பரியப் பிறப்புரிமையைக் கொண்டதாக இருக்கின்றது அல்லது ஞானஸ்நானம் பெறுவதுடன் திருப்தி அடைந்து விடுகின்றது. ஆனுல், அதுமட்டும் போது மானதல்ல. நாம் உறுதியான சமய ஞானம் (Religious Mind) உடையவராக வாழவேண்டும். நம்மைச் சூழ்ந்துள்ளோர் மட்டில் நமக்குள்ள கடமைகளை நுணுக்கமுடன் அறிந்திருக்கவேண்டும். எனவே கல்வி ஞானம் பெற்ற இளைஞர்களே கடவுளால் நமக்களிக்கப்பட்ட இச்சந்தர்ப்பத்தை முழுமூச்சுடன் செயல்படுத்த முற்படவேண்டும். இதை நாம் என்றும் மறந்துவிடக்கூடாது. கடவுளால் நமக்களிக்கப்பட்ட இக் கொடை கூடியமட்டும் அவருடைய மகிமைக்காக சேவைக்காகப் பயன்படுத்தப்பட வேண்டுமென நம்மிடம் எதிர்பார்க்கின்றுர். நாம் இலெளகீக காரியங்கள் மட்டில் ஈடுபாடுள்ளவர்களாக மட்டும் இருந்துவிடக்கூடாது.

கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றவர்கள் தமது தாய் நாட்டின் மேல் கொண்டுள்ள முக்கிய கடமைகளை உணர்ந்து கொள்ளல் அவசியம். கிறிஸ்து அரசை நம் மத்தியில் ஸ்தாபித்துக்கொள்ள முற்படவேண்டும். சரித்திரங்களுக்கு அப்பாற்பட்ட நமது பழைய கொள்கைகளை ஒரு புறத்தே அகற்றிவிட்டு, புதுமை விரும்பும் இச்சமுதாயத்துக்குப் புத்துணர்ச்சி கொடுக்கப் புதுப்புது முறைகளை நமது அன்றுட வாழ்வில் புகுத்தவேண்டும். அத்துடன் இவற்றை ஏற்றுக்கொள்ள நமது உள்ளத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். கிறிஸ்து யூதகுலத்தின் கலாச்சாரத்துக்கும், சுற்றுடலுக்கும் ஏற்றபடி அவதரித்து வாழ்ந்து காட்டினுர் அன்று. ஆனுல் இன்று, கிறீஸ்துவம் பல குலங்களுக்குமுரிய கலாச்சாரத்துடன், செயல் முறையில் தாராளமான மனப்பான்மையுடன் வாழ்ந்து வருகின்றது. நாம் ''இந்து''க்களின் மனப்பான்மையையும், ஓரளவு அவர்களுடைய ''தத்துவங்களையும்'' அறிந்திருத்தல் அவசியம். நமது ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துவின் பூரணத்துவத்தையும், நிறைவையும் நாம் மற்றையோருக்கும் எடுத்தியம்பும் வேளையில் நாமும், திறந்த மனத்துடன் நமது சடங்குகளிலும், உருவத்திலும், அவர்கள் விரும்பும் மாற்றங்கள், சகலரும் ஏற்றுக் கொள்ளக் கூடியனவாகவுள்ளவற்றை நல்ல மனத்துடன் ஏற்றுக் கொள்ள விரும்புதல் வேண்டும். கிறிஸ்துவிற்குப் பின் இற்றைவரை திருச்சபையானது தன்னுள் பல கலாச்சாரங்களையடுத்த வெளி ஆடம்பரங்களைத் தாராளமனத்துடன் ஏற்று வந்திருக்கின்றது.

**திரு. க அமலநாதன் B. Sc.**

இன்று படித்த இளைஞர்களாகிய நம்முன் பெரும் சேவை எதிர்நோக்கியுள்ளது. நாம் கடவுளின் மக்கள். இது முக்கியமும், முதன்மையுமுடைகதாகும்; அதோடு மட்டுமன்றி சுதந்திர இலங்கை நாட்டின் மக்களுமாகும்.

(12ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**இளைஞர் இல்லம்............**

(11ம் பக்கத் தொடர்ச்சி)

கடவுளிடமிருந்துதான் சகல அதிகாரங்களும் வருகின்றன என்பதை நாம் விசுவசிக்கின்றோம். அவரின் ஆணையைப் பிறருக்கு எடுத்தோதும்போதும், அதை நிறைவேற்றும் போதும், அந்த நம்பிக்கையில் பிளவுகள் எதுவும் ஏற்படமுடியாது. சேசாருடையதை சேசாருக்கும், கடவுளுடையதைக் கடவுளுக்கும்கொடு: இந்த முக்கிய கடமையைப் பொறுத்தமட்டில் நாம் இந்த உலகிற்காக உபவாசம் செய்யவும், மன்றாடிக்கொள்ளவும் மறக்கக்கூடாது. 'உலகம் நாத்திகப்பாதையில் குருட்டாட்டத்தனமாக விரைந்து கொண்டிருக்கிறது. ஆனால், நாம் ஒவ்வொருவரும் நமது வாழ்வைப் பரிகாரமாகப் பலி கொடுத்தால் இந்தப் போக்கைத் தடுத்து நிறுத்தமுடியும்' என்று கிறிஸ்துவின் போதனைகள் நமக்கு அடிக்கடி நினைவூட்டுகின்றன. ஆனால் இது எந்த வகையிலும் இலகுவான காரியமல்ல.

ஆ! அதோ நெருக்கமுடன் ஓங்கிநிற்கும் சமயத் துறவிகளின் ஆச்சிரமங்களைப்பார். உனக்காக, வளர்ந்துவரும் சமுதாயம் இரட்சிக்கப்படுவதற்காக, தம்மை மட்டுமன்றித், தமது ஆசாபாசங்களையும் உதறித் தள்ளிவிட்டு சேவைமனப்பாண்மையுடன்புறம்பான ஒருபுது சீவியத்தையே ஏற்படுத்தி வாழும் ஒருசமுதாயத்தைப்பார். ஏன் இந்த வாழ்க்கை? கிறிஸ்துவின் போதனைகள் கொடுக்கும் இன்பம் எல்லையற்றதா? அது நம்பிக்கையும் பெரும் சாந்தியும் கொடுக்கும் வற்றாத சுனையா? ஆம்! எல்லையில்லாத அன்பாலே தன் ஏக மகனை எமக்களித்த இறைவன் கொடுக்கும் கொடை அளப்பரிய தென்றல் யார்தான் மறுக்க முடியும்.

கிறிஸ்துவ வாழ்க்கை வாழ்ந்து சமுதாய நீதியில் உன்னை ஈடுபடுத்தி, உன் அயலான் மட்டில் உனக்குள்ள கடமையை மதித்து, கிறிஸ்துவ வாழ்வின் சிறந்த நோக்கத்தை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் போதித்து, உயிருள்ள கிறிஸ்தவனாக வாழ். தினமும் மன்றாடு. துன்பம் அனுபவிக்கத் தயங்காதே. கடவுளின் மகிமைக்காக, கடவுளின் நாமம் போற்றப்படுவதற்காக, அவர் நமது நாட்டுமக்களால் நேசிக்கப்படும் படியாக எதையும் ஏற்றுக்கொள்ள அஞ்சாதே. இதைச் செய்வதால் உனது மதத்தில் உனக்குள்ள கடமையைச் செய்தவனாகத் திருப்தியடைவாய். ★

---

# விவிலியத்தைப் படிப்போம்

## அருள்திரு. K. சுவாமிநாதன் அடிகள்.

### (4) மனித எழுத்துள் மறைந்துள்ள இறைவனின் செய்தி.

விவிலிய ஏட்டினைப் படிக்கப்படிக்க அதனிடை நாம் அதனை எழுதிய மனிதனின் கரத்தை இலகுவிற் காணலாம். ஆனால் விசுவாசம் என்னும் அரும்பெருங் கொடையைப் பெற்றவர்கள் இவ்வேட்டிலே மறைந்து நிற்கும் இறைவனின் அன்புக் கரங்களையும் இலகுவிற் காணலாம். கிறிஸ்துவ விசுவாசம் மனிதனிடமே இருந்து பிறக்கும் ஒன்றல்ல. மாறாக, வானின்று இறைவனால் இனாமாய் அளிக்கப்படும் ஒரு கொடையாகும். விசுவாசம் என்பது இறைவன் தன்னைத்தானே மனிதனுக்கு அளிக்கும் வழியாகும். எனவே இங்கு விவிலியம் இறைத் தன்மை படைத்த ஏடு என்று நிரூபிப்பது எமது நோக்கமல்ல.

ஏனெனில், நாம், ஆண்டவர் இயேசு உருவாக்கிய திருச்சபையை ஏற்றுக்கொள்வதனால், அச்சபை அளிக்கும் இறை செய்திகள் அடங்கிய விவிலிய ஏட்டையும் இறைவனே எமக்கு அருளினார் என ஏற்றுக்கொள்வது, திருச்சபை மீது நமக்குள்ள விசுவாசத்தின் ஓர் அம்சமாகும். கிறிஸ்துவிலும் அவருடைய திருச்சபையிலும் நமக்குள்ள நம்பிக்கைக்கு நாம் விவிலிய ஏட்டிலே ஆதாரங் காண விளைதல் மடமைத்தனமன். அன்றும், இன்றும், என்றும் கிறிஸ்த்து இயேசுவிலேதான் கடவுள் நமக்குத் தம்மை வெளிப்

(13ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

*விவிலியத்தைப்...........*

[12ம் பக்கத் தொடர்ச்சி]

படுத்தியுள்ளார். மேலும், கிறிஸ்து இல்லை யேல் விவிலிய ஏடும் தன் இறைத் தன்மையை இழந்து விடும். நம் மீட்பர் இயேசுக்கிறிஸ்து, விவிலிய ஏட்டைத் தனக்கொரு சாட்சியாயும், அடையாளமாயும் விட்டுச் சென்றுள்ள மையினாலேதான் நாம் அதனை இறையேடு என ஏற்றுக்கொள்கிறோம்.

விசுவாசம் எனும் கொடையைப் பெறாத ஒரு சாதாரண மனிதனுக்கு விவிலிய நூல் ஓர் புரியாத புதிராக, பலதரப்பட்ட 72 தொடர்பற்ற நூல்கள் ஒன்றாக வைத்துக் கட்டப்பட்டு, கிறிஸ்த்துவ மக்களால் போற்றப்படும் ஒரு ஏடேயாகும். அதனுள் பொதிந்து கிடக்கும் மனித வரலாறும், அறநெறிக்கொவ்வா மானிடச் செயல்களும், கொள்கைகளும், மற்ற அனைத்தையும் மறைத்துவிடும்.

ஆனால், ஒரு கிறிஸ்தவனுக்கோ இவ் வியத்தகு ஏடு, படிக்கப் படிக்க, பரமனே இப் புனித நூலின் ஆதியும் அந்தமுமாய் இருக்கிறார் எனும் கருத்தை ஆழமாகப் பதியச் செய்யுமேயன்றி ஒரு போதும் அழித்துவிட மாட்டாது.

அவ்வாறு நோக்கின் மனிதனை மீட்க, இஸ்ராயேல் எனும் இனம் தெரிவு செய்யப் பட்டது, இறைவன் இனமாய் அளித்த ஒரு கொடையாகும். எண்ணற்ற மக்களுள் இப் புதிய குலத்தின் தந்தையாக ஆபிரகாம் தெரிந்தெடுக்கப்பட்டாரென்றால், அதுவும் இறைவன் அளித்த ஒரு கொடையாகும். மற்றைய பிதாப்பிதாக்களும், மோயீசன், ஜொசுவா, ஆகியோர் தலைவர்களாய் அமர்த்தப் பட்டதும் இறைவன் செய்த ஒரு செயலேயாகும்.

ஈசோவைத் தவிர்த்து, யாக்கோபைத் தெரிந்த செய்தியிலும், சவுலைத் தவிர்த்துத் தாவீதைத் தெரிந்த செய்தியிலும், கடவுளின் வலக்கரத்தை நாம் காணமுடிகின்றது. இஸ்ராயேல் இனத்தின் 11 கோத்திரங்கள் பாழடைந்த போதும், யூதாவின் கோத்திரம் காப்பாற்றப்பட்டதேயானால், அது கடவுள் கொடுத்த ஒரு பாக்கியமேயன்றி வேறல்ல.

பபிலோனிய மன்னன் கீழ் எழுபது ஆண்டுகள் இரண்டாம் முறையாக அடிமைகளாய் இருந்த இஸ்ராயேல் மக்கள், எதிர்பாராத வண்ணம் விடுதலை பெற்றுச் சுயநாடு மீண்ட செய்தியிலும், மக்கபேயும் மக்களும் சடுதியாய் அடைந்த வெற்றி வாகையிலும், ஏன், புனித ஸ்நாபக அருளப்பரின் புதுமையான பிறப்பு வரலாற்றிலும், சவுல் பவுலாக மாறிய சம்பவத்திலும், மனித வரலாற்றிலே இறைவன் தலையிட்டு அனைத்தையும் ஆண்டு நடத்தி வருகிறார் என்பது வெளிப்படுகின்றது.

பன்னிரு பாமர கலிலேயருடன் ஆரம்பமாகிய சிறியதோர் கூட்டம் உலகினையே ஆட்டிவைக்கும் ஒரு மாபெரும் சமுதாயமாய் இன்று மாறியுள்ள வரலாறுகூட, மனிதன் வாழ்விலே கடவுளின் ஆட்சியையும் மாட்சியையும் நமக்குத் தெட்டத் தெளிவாய்க் காட்டுகிறது.

பலவீன மனிதனின் வரலாற்றில் பலமுள்ள இறைவனின் கரத்தையும், மனிதனின் வீழ்ச்சியில் மன்னித்து மீட்பளிக்கும் கடவுளின் அன்பையும் எமக்கெடுத்தியம்பும் புனித ஏடாய் விளங்குகின்றது விவிலியம். சாவின்மீது வாழ்வடையும் வெற்றியிலும், தாழ்ந்தோர் உயர்ச்சி அடைவதிலும், பலம் வாய்ந்த மன்னர்களும், மாநிலங்களும் அடைந்த வீழ்ச்சியிலும் கடவுளின் சக்தியும் வல்லமையும் வெளிப்படுகின்றன.

இவ்வாறு ஆதியாகமத்தில் ஆதாம் படைக்கப்பட்டதிலிருந்து, திருவெளிப்பாடு ஆகமத்தில் மீட்கப்பட்ட மனிதனுக்கு இனமாய்க் கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியும், பரமனின் வாழ்க்கையும் மனிதவாழ்வின் மையம் மனிதனல்ல, இறைவனே எனும் செய்தியை எமக்கெடுத்தியம்புகின்றன. மேலும், மனித மீட்பு இறைவன் தானயளித்த அரும்பெருங் கொடை என்ற செய்தி ஆணித்தரமாயும், அழுத்தந் திருத்தமாயும் அறிவிக்கப்பட்டுள்ளதை நமது விசுவாசக் கண்ணால் காண முடிகிறது. ★

---

**பெற்றோர் மன்றம்.........**

[4ம் பக்கத் தொடர்ச்சி]

மதவேற்றுமை குடும்ப ஒற்றுமைக்கும், பிள்ளைகளை நன்றாக வளர்ப்பதற்கும் பெரும் முட்டுக்கட்டையாக விளங்குகின்றது என்பதை அனுபவப்பட்டவர்கள் நன்றாக உணர்வர். ஆகவே, திருமணத்திற்கு ஆயத்தப்படுத்தும் இளைஞர் கூடிய மட்டும் கலப்பு மணத்தை நீக்கித் திருமணம் செய்துகொள்ள, பெற்றோரும் பெரியோரும் அவர்கட்குப் புத்திமதி கூறி அவர்களை வழி நடத்த வேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மகளிர் மன்றம்

## தாயும் சேயும்

பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்கள். இந்தப் பெண்ணுக்கு இரங்கவில்லையே. கடற்கரையின் அருகே சிறு குடிசை. ஏழைத்தாயும் பேய் பிடித்த சிறுமியும். அச் சிறுமி திடீரென மிரளுவாள். பேயொலியுடன் சிரிப்பாள். பாவம் தாய் என்ன செய்வாள். மருந்திலும் மாயத்திலும் காசை அழித்தாள். கை எடாத தெய்வம் இல்லை. சாமி, பூதத்துக்கெல்லாம் படைத்தாள், பிள்ளைக்கு உடல் நலம் வந்த பாடில்லை. பெற்ற மனம் எப்படித்தான் சகிக்கும். என்ன கண்ணராவி அக்கம் பக்கத்தார் சொல்வதெற்கெல்லாம் தலை சாய்த்தாள். ஒரு நாள் யாரோ ஒருவர் சொல்லக் கேள்வி. யூதர்கள் நடுவில் யாரோ ஒருவர் தோன்றியிருக்கிறார். மிகவும் நல்லவர்; சாந்தமே உருவானவர்; இரக்கமுள்ளவர்; அவர் கையால் தொட்ட நோய் நொடி எல்லாம் காற்றாய்ப் பறந்திடும். பேய்கள் முதலாய் அவர் ஒரு வார்த்தையால் ஓடி விடும். ஆனால், அவர் யூதர். அவள் யூதப் பெண் அல்ல. எனினும் மகளின் பாசம் சாதி, மத, பேதத்தைத் தடுத்தது. ஆனால், அவரை எங்கே சந்திப்பது, எங்கே இருக்கிறாரோ? என்னைப் புறக்கணித்தால்? இல்லை அவர் நல்லவராமே. எப்படி இந்த முரட்டு மகளைக் கொண்டு செல்வது? ஐயோ மகளே, தெய்வந் தான் இரங்க வேண்டும் எனக் கண்ணீர் வடித்தாள்; உள்ளங் குமுறினாள்; வாடி வதங்கினாள்.

××××××××××××× ×××××××××××××

**சிஸ். மேரி லில்லி ஒசா. அ. கா.**

××××××××××××× ×××××××××××××

ஒரு நாள் அவள் குடிசைக்கு முன் ஒரு கலவரம், அவளுடைய யூத தோழிகள் அவர் நமது ஊருக்கு வந்திருக்கிறார். ஏன் போய் பார்க்கக் கூடாது? என்றார்கள். வாய்ப்பை நெகிழ விடாமல் உடனே செல்கிறாள்; விரைந்து செல்கிறாள். என்ன? மகளின் பித்து இவளுக்கும் பிடித்து விட்டதா? பார்த்தவர்கள் பரிகாசம் பண்ணுகிறார்கள். வீதியில் வருகிறவர்கள் போகிறவர்களிடமெல்லாம் அவரைப் பற்றி வினவுகிறாள். கடைசியாகக் கண்டு பிடித்தாள். "அசுத்த அரூபி பிடித்திருந்த குமாரத்தியுடைய ஒரு பெண் அவரைப் பற்றிக் கேள்விப்பட்டவுடனே உள்ளே வந்து அவள் பாதத்தில் விழுந்தாள். அந்தப் பெண் சிரோ பெனிசியாவில் பிறந்தவளும் அஞ்ஞானியுமாய் இருந்தவள்."

அங்கே, எல்லாரும் ஆண்கள். அவர்களில் ஒருவர் அருளும், அன்பும், அனுதாபமும் வழிந்தோடும் முகம். இரக்கம் சுரக்கும் இதயம். இதய மறைவுகளை ஊடுருவும் கண்கள். இவராகத் தான் இருக்க வேண்டும். அவர்பால் ஈர்க்கப்பட்டாள். தன் இனத்தை மறந்தாள். மதத்தை மறந்தாள் தன்னையே மறந்தாள். பாதத்தில் விழுந்தாள் "ஆண்டவரே தாவீதின் குமாரனே என் பேரில் இரக்கமாயிரும். என் மகள் பசாசினால் கடினமாய் உபாதிக்கப்படுகிறாள்." வார்த்தைகள் புரண்டோடின. கண்ணீர் வழிந்தோடின. அழுதாள்; அரற்றினாள் அவர் அவளை நோக்கினார். அன்பே அவர். அவரே அன்பு. தம்மை அண்டியவர் அனைவரையும் அன்புடன் நோக்கி, தொட்டு சுகம் கொடுத்தார். எல்லார் கண்ணும் அவர்மேல். மௌனம் சாதித்தார். தாயும் அசையாத நம்பிக்கை வைத்திருந்தாள் - தன் மகள் சுகப்படுவாளென்று. ஆனால், யாதொன்றும் பேசவில்லை. என்ன கடின மனது. உடைந்த உள்ளங்கொண்ட தாய்க்கு ஆறுதல் கூறக் கூடாதா? ஒரு ஆறுதல் வார்த்தையாவது? மனம் நொந்து அவ்விடத்தை விட்டு வீடு சென்றாளா? இக் கடுமையான வேளையிலும் ஏதோ ஒன்று அவர்பால் இழுத்தது. அவள் நம்பிக்கையை இழக்கவில்லை. அவர் சென்றார். அவளும் சென்றாள். அழுது கொண்டு, கூப்பிட்டுக் கொண்டு அவர் பின்னே சென்றாள். அடிபட்ட குழந்தை அடித்த அன்னையை அணுகிச் செல்வதுபோல் சென்றாள். அவர் அவளைக் கவனிக்கவில்லை.

[15ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மகளிர் மன்றம்...........

(14ம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. சீடர்கள் திரும்பிப் பார்த்தார்கள். சொல்லிப் பார்த்தார்கள். சினந்தார்கள். அவள் நிற்கவில்லை. அவரும் பேசவில்லை. துரத்திப் பார்த்தார்கள். அவர்களால் முடியவில்லை. நின்றார். அவளும் நின்றாள். அவளைப் பார்த்தார். பார்வையில் கனிவு இருந்தது. வார்த்தையிலோ கடுமையிருந்தது! ''இஸ்ராயேல் கோத்திரத்திலிருந்து சிதறிப் போன ஆடுகளிடத்திற்கு அனுப்பப்பட்டேனே ஒழிய மற்றப்படியல்ல'' என்றார். அவர்கள் அகமகிழ்ந்தார்கள். அவள் அங்கலாய்த்தாள். அவர் முடியாது என்று சொல்லவில்லையே. போ என்று விரட்டவில்லையே. அவர் பார்வையில் இன்னும் இரக்கம் தோன்றுகிறது. அவள் அதில் இன்பம் கண்டாள். விடாப்பிடியாய்க் கெஞ்சினாள். அவள் ஒரு பெண், யூதப் பெண் அல்ல. துயரால் வாடி நிற்கும் ஒரு தாய். தஞ்சம் அவர் என்று தேடி வந்த அவலப் பெண். கேட்கிறாள்; தேடுகிறாள்; தட்டுகிறாள். அகப்படவில்லை. கடுஞ் சொற்களை அடுக்குகிறார். ''பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்களுக்குப் போடுவது நல்லதல்ல'' என்றார். எத்தனை சூடான சொற்கள். தன் மானமுள்ள எவளும் அவ்விடத்தை விட்டு அகன்று விடுவாள். ஆனால் அவளா? விடாமுயற்சியே உருவான அவளா? அவள் தாய்!'' ஆனால் நாய்க்குட்டிகளும் ஏஜமான் மேசையிலிருந்து விழும் உரொட்டித்துண்டுகளை தின்குமே என்றார்''

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் அவர் அடக்கி வைத்திருந்த உணர்ச்சிகள் பொங்கி எழுந்தன. இனி அவராற் தாங்க முடியாது. கடிந்தது போதும். உணர்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்தது. மாதே! உன் விசுவாசம் பெரிது. நீ விரும்பியபடியே உனக்காகக்கடவது. பசாசு உன் மகளை விட்டுப் போய் விட்டது'' அவள் நம்பினாள். நன்றி செலுத்தினாள். வீட்டுக்கு விரைந்தாள். ''சிறு பெண் மஞ்சத்தின் மேல் படுத்துறங்குகிறதையும் பசாசு போய் விட்டதையும் கண்டாள்''

இவ்வளவும் திருவிளையாடல் தானே? அவர் நம்மோடு விளையாடுகிறார். தாய் தன் பிள்ளையை ஏமாற்றி அழுகையை மூட்டி இன்புறுவது போல அவர் நம்மை அழச் செய்கிறார். நம் விசுவாசத்தை பரிசீலனை செய்கிறார். விடாமுயற்சி இருக்கிறதா? விசுவாசத்தில் நிலைத்திருக்கிறோமா? சோர்வடைகிறோமா நம்பிக்கையை இழக்கிறோமா? என்று பார்க்க விரும்புகிறார். யாமோ கேட்டவை உடனே கொடுக்கப்படாவிடின் சோர்வடைகிறோம். நம்பிக்கையை இழக்கிறோம். செபத்தைக் கைவிடுகிறோம். கேளுங்கள் கொடுக்கப்படும் என்றவர், கேட்கும் முதல் விநாடியே கொடுக்கப்படும் என்று சொல்லவில்லையே. இதை நாம் மறக்கிறோம்.

அவளது செபம்! நாய்க்குட்டிக்கு ஒப்பிட்டும் அவள் அகலவில்லை. தாழ்ச்சி நிறைந்தது. முடிவு வரையில் பின் செல்கிறது. விசுவாசமுள்ளது. தன்னலம் அற்றது. அன்பு நிரம்பியது. விடா முயற்சியுடன் செய்யப்பட்டது. நம்முடைய செபம் எப்படி?

சோதனையிலும், வேதனையிலும் எல்லா வேளைகளிலும் அவரை அண்டிப் போக வேண்டும். முழு நம்பிக்கை வைத்து தாழ்ச்சியுடன் ஓயாமல், ஒழியாமல், உறங்காமல் செபிக்க வேண்டும். கல் நெஞ்சர் போல் சிறிது காலம் காட்டிக் கொள்வார். திறமையுடன் நடிப்பார்; ஆனால் அவரால் முடியாது. இளகிய இதயம் அவர் நடிப்பைக் காட்டிக் கொடுத்து விடும். ஆகவே அன்பரை நாடிடுவோம்; அன்பைப் பெறுவோம்; இன்பம் பெருக்குவோம். ★

## இவள் யார்?

அப்பா மாட்டின் அன்பினிலே
ஆசைக் கிளிமலர் அமர்ந்திடுமே
இன்பக் கதைகள் காதினிலே
ஈய அன்பால் சொரிந்திடுமே
உலக இன்ப சுகந்தனிலே
ஊன்றி வாழ்வதை வெறுத்திடுமே
எண்ணி எண்ணி விண்ணினிலே
ஏங்கித் தவித்து வாழ்ந்திடுமே
ஐ மூன்று பராயம் அளவினிலே
ஒடுங்கி அடங்க விளைந்திட்டதே
ஓங்கி வளர்ந்த புஸ்பத்திடம்
ஔடதம் தேடின் அடைந்திடு வீர்.

Ss. M. Liliosa, A. C.
திருமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இருதயபுரத்திலிருந்து...

இருதயபுர இயேசுவின் திரு இருதய ஆலயப் பரிபாலன சபையின் யாத்திரைக் குழு திரு. G. இம்மானுவேல் தலைமையில் கடந்த 5-9-70ல் ஆயித்தியமலை அன்னையை நோக்கி ஒரு பாத யாத்திரையை மேற்கொண்டது. அன்று காலை எமது தந்தை அருட்திரு சாமிநாதன் அவர்கள் ஆலயத்திற் கூடிஇருந்த 150 யாத்திரிகளுக்கும், அதன் நோக்கம் பற்றியும், புனிதத்தன்மை பற்றியும் தெளிவாக விளக்கியபின் திவ்விய நற்கருணை ஆசிர்வாதம் அளித்து, யாத்திரையை ஆரம்பித்து, அவரும் கலந்து கொண்டார்.

பச்சிளம் பாலர்களைக் கையில் ஏந்திய தாய்மாரும், இளைஞர், இளமங்கையரும், பங்கின் பெரியோரும், முதியோரும் செந்தாமரைபோற் சிரித்த முகம் கொண்ட சிறுவர்களும். ஒருமுகமாய்ச் செபமாலை ஓதி அன்னையின் புகழ் பாடிச் சென்ற காட்சி பரவசமூட்டக் கூடியதாய் இருந்தது.

செல்லும் வழியிலே, சிற்சில இடங்களில் அனைவரும் ஒன்றாய் நின்று, நற்செய்தி ஏட்டிலிருந்து வாசிக்கக் கேட்டு, தியானித்துச் சென்றனர்.

வெயிலின் அகோரத்தையும், வரண்ட தொண்டையையும், நடையால் ஏற்பட்ட களைப்பையும் பாராது, யாத்திரிகள் அனைவரும், இடையிடையே நின்று சிலுவையின் பாதையைத் தியானித்துப் பாவப்பரிகாரம் செய்தனர்.

சுமார் 12-30 மணியளவில் திரு. குருஸ் அவர்களின் வாடியில் அருட்திரு. சுவாமிநாதன் அடிகளார் திருப்பலி ஒப்புக்கொடுக்க யாத்திரிகள் அனைவரும் களைமறந்து ஒரு மனமாய்ப் பலியிலே பங்குபற்றித் திருவிருந்தும் அருந்தினர்.

பலிபூசையின் பின் வாடியின் தலைவர் திரு. குருஸ் அவர்கள் அளித்த மதிய போசனத்தை மகிழ்வுடன் உண்டுகளித்து வீரநடை போட்டுத் திருப்பதி சென்றடைந்தனர்.

G. அன்ரனி

## கிறிஸ்துவில் இளைஞர்

1. சோதனை நேரத் திலும் – நாம்
சோர்ந்து கிடக்கமாட்டோம்
சாதனை செய்தே என்றும் – நாம்
சஞ்சல மின்றி வாழ்வோம்.

2. பாதகச் செயல் வரினும் – நாம்
பயந்து வாழ மாட்டோம்.
தீதுகள் போக்கி என்றும் – நாம்
திடமுடன் வாழ்ந்திடுவோம்.

3. தொடை யினழகு காட்ட – நாங்கள்
உடையை அணியமாட்டோம்.
மடையர்கள் கூறுமிந்த – உரையை
மனதில் கொள்ள மாட்டோம்.

4. காளைநிலை யென்றாலும் – நாங்கள்
கடவுளை மறக்க மாட்டோம்.
வேளை தவறிடாமல் – நாங்கள்
வேண்டுவோம் எம்பிரானை.

5. தூய நல் யேசு பிரான் – எமக்காய்
தோன்றியே தந்து விட்ட
ஆய நல் போதனை பார் – அதை
அன்புடன் ஏற்றிடுவோம்.

6. உலகினை மீட்டுவரும் – எமது
உண்மை இறைவனையே
நிலவும்வரை வாழ்த்தி – வாழ்வில்
நேர்த்தியை பெற்றிடுவோம்.

E. C. பெர்ணாண்டோ,
கல்முனை.

## தொண்டன் விநியோகஸ்தர்கள் கவனிக்கவும்.

தொண்டன் விநியோகஸ்தர்கள் தொண்டனுக்குச் செலுத்தவேண்டிய பணத்தைப் பின்வரும் முகவரிக்குத் தாமதமின்றி அனுப்பிவைக்கவும். தொண்டனைத் தொடர்ந்து பிரசுரிப்பதற்கு உங்கள் ஒத்துழைப்பு மிகவும் வேண்டப்படுகிறது. தொண்டன் நிர்வாகி, ஆயர் இல்லம், மட்டக்களப்பு.

இப்பிரசுரம் மட்டக்களப்பு 18, மத்திய வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சகத்தில், மனேஜர் யோசேப் B. மறே S. S. J. அவர்களால் அச்சிடப்பட்டு, மகா வந். வ. தியோகுப்பிள்ளை, துணை ஆயர், மட்டக்களப்பு அவர்களால் 8-10-70ல் வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media